**அ.வ.எண்: 44/2021** **நாள்: 16.09.2025**

வா.சா.1 – சுப்பிரமணியன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாவா வழக்கின் முதல் வாதி ஆவேன். தாவா வழக்கில் மொத்தம் எத்தனை பேர் வாதிகள் உள்ளனர் என்றால் 7 வாதிகள் உள்ளோம். மேற்படி வாதிகள் மாணிக்கம் முத்துசாமி சுப்பிரமணி ரத்தினம் பழனியப்பன் ராமு லட்சுமி ஆவார். தாவா வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்துக்களை பிரிப்பதற்கு வாரிசு சான்றிதழ் வேண்டும் என்று சொன்னார்கள் அதனால் வாரிசு சான்றிதழ் வேண்டி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எனது தகப்பனார் காளியப்பன் தேரளப்பூர் உடையன வயல் என்ற ஊரில் இறந்தார். அவர் இறந்த தேதி நினைவில் இல்லை. எனது தகப்பனார் காளியப்பனுக்கு நான் 3 வது மகன் ஆவேன். எனது மூத்த அண்ணன் பெயர் மாணிக்கம், அவர் தற்போது உயிருடன் தான் உள்ளார்.

2. மேற்படி மாணிக்கத்தை ஏன் விசாரிக்கவில்லை என்றால் அவர் சென்னையில் உள்ளார், அதனால் நான் அவர் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது தேவகோட்டையில் வசித்து வருகிறேன். நான் 2000 ம் ஆண்டு முதல் தேவகோட்டையில் தான் குடியிருந்து வருகிறேன். நான் வாரிசு சான்றிதழ் கோரி எப்போது யாரிடம் மனு செய்தேன் என்றால் ஆன்லைனில் தாசில்தாரிடம் மனு செய்தோம் பின்பு கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் அவர்களிடம் மனு செய்தோம். மேற்படி மூன்று அதிகாரிகள் இடமும் ஒரே தேதியில் தான் மனு செய்தேன், தேதி நினைவில் இல்லை. எப்போது என்ன காரணத்திற்காக மனு நிராகரிக்கப்பட்டது என்றால் ஆன்லைனில் மனு தாக்கல் செய்த 15 நாட்கள் கழித்து நிராகரிக்கப்பட்டது.

3. நான் மனு செய்த போது என்ன என்ன ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்றால் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வீட்டு வரி ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்தேன். என்ன காரணம் கூறி எனது மனு நிராகரிக்கப்பட்டது என்றால் என் தகப்பனாருக்கு 2 மனைவிகள் உள்ளதாக VAO கூறினார், அதனால் மனு நிராகரிக்கப்பட்டது. எனது தகப்பனாருக்கு எத்தனை மனைவிகள் என்றால்

ஒரே மனைவிதான். மேற்படி VAO தாக்கல் செய்த அறிக்கையில் 2 மனைவிகள் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரிதான். எனது தகப்பனருக்கு திருமணமாகி உமையாள் என்ற மகள் பிறந்துள்ளாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு உமையாள் என்ற மகள் கிடையாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. இறந்த என் தகப்பனாருக்கு திருமணம் ஆகி உமையாள் என்ற மகள் பிறந்துள்ளார் என்றும் உமையாள் என்பவருக்கு ஆத்தங்குடியில் திருமணம் ஆகி இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் தெரியவந்துள்ளது என்றும் நான் தாவா வழக்கிற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தாயார் மீனாட்சி எனது தந்தையின் இரண்டாவது மனைவி என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிராம நிர்வாக அலுவலரின் விசாரணையில் தான் மீனாட்சி என்பவருக்கு மாணிக்கம், முத்துசாமி, சுப்பிரமணியன், பழனியப்பன், ரத்தினம் (இறப்பு), ராமு , லட்சுமி ஆகிய மக்கள் உள்ளனர் என்றால் சரிதான். இறந்த ரத்தினம் என்பவரின் வாரிசுகளை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இறந்த ரத்தினம் என்பவருக்கு பூமயில் என்ற மனைவியும் கல்பனா என்ற மகளும் பழனியப்பன் என்ற மகனும் உள்ளனர் என்றால் சரிதான். நான் என் தந்தையின் முதல் மனைவியின் மகளை மறைத்து தேவகோட்டை வட்டாட்சியரிடம் வாரிசு சான்றிதழ் கோரி மனு செய்ததால் மேற்படி மனு நிராகரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

5. ரத்தினத்தின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பித்த பொழுது நான் தாக்கல் செய்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் மனு செய்த போது தாக்கல் செய்த ஆவணங்களை தவிர வேறு ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் தந்தையின் முதல் தாரத்தின் மகளை மறைத்து வாரிசு சான்றிதழ் கோரியுள்ளதால் தாவா வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இறந்த ரத்தினம் என் தந்தையின் மகன் தான் என்று சொன்னால் சரிதான், என் உடன்பிறந்த சகோதரர் தான்.

மேற்படி ரத்தினம் இறந்த பிறகு அவரின் வாரிசுகளை சேர்த்து தான் தாவா வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள நிரூபன வாக்குமூலத்தில் இறந்த ரத்தினத்தின் பெயரையோ அவரது வாரிசுகளின் பெயர்களையோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண் 11/2017 ந.க.எண், வ.நி.5(3)/180/2017, நாள் 09.08.2017 சுற்றறிக்கையின் படி ஒன்றுக்கு மேற்பட்ட கணவன் அல்லது மனைவி உள்ள இனங்களில் வட்டாட்சியர் வாரிசு சான்று வழங்கக் கூடாது எனவும் உரிய நீதிமன்றத்தின் மூலம் வாரிசு சான்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது இறந்த காளியப்பன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்பதால் வட்டாட்சியரால் வாரிசு சான்று வழங்க இயலாது. தாவா வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.